**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS,
# MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124 / 2023** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | **திருமதி.அமுதா** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.11.2025**

எதிரிகள் 2,3 ஆஜர். எதிரி-1 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் திண்டுக்கல் மாவட்டம், கக்கன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் எனது கணவர் மாரிமுத்து, மற்றும் தேன்மொழி என்ற மகாலெட்சுமி மற்றும் தீபிகா என்ற 2 பெண் பிள்ளைகள். நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இறந்து போன 1 வது எதிரி ராஜா எனது மருமகன். 2,3 எதிரிகள் இருவரும் 1 வது எதிரியின் பெற்றோர்கள். எனது மூத்த மகள் தேன்மொழி என்ற மகாலெட்சுமிக்கும் இறந்து போன 1 வது எதிரிக்கும் 13.03.2019 ம் தேதி முத்துப்பட்டி, அழக்கப்பாநகரில் உள்ள அவர் குலதெய்வம் கோவிலில் திருமணம் நடைபெற்றது. 13 பவுன் நகையும் அண்டா, பானை, கட்டில் பீரோ, போன்றவை இரட்டை சீர் வரிசையாகக் கொடுத்தேன். என் மூத்த மகளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. என் மூத்த மகளை கல்யாணம் முடித்துக் கொண்டு சென்ற நாளில் இருந்தே, எதிரிகள் அனைவரும் நகை நட்டு கேட்டு டார்ச்சர் செய்து, அடித்து, உதைத்து டார்ச்சர் செய்து வந்தார்கள். 13.07.2021 ம் தேதி இரவு 08.30 மணிக்கு என் மகள் போன் போட்டு என்னைக்

கூப்பிட்டு, தோடு நகை நட்டு கேட்டு டார்ச்சர் செய்கிறார்கள், என்னை வந்து கூட்டிப் போப்பா என்று சொன்னார். கொஞ்ச நேரம் கழித்து வருகிறேன்ப்பா என்று சொல்லிவிட்டு என் கணவர் போனை வைத்துவிட்டார். என் மருமகனின் நம்பரில் இருந்து என் மகள் பேசினார். அந்த நம்பர் 34 என்று முடியும். அன்றைய தினம் இரவு 09.15 மணியளவில், பஞ்சவர்ணம் என்பவர் எனது கணவரின் செல்போனில் பேசி, உங்க மகள் மண்ணெண்ணெய் ஊத்திக்கிடுச்சு, GH க்கு வருமாறு சொன்னது. நானும் எனது கணவர் மற்றும் உறவினர்களும் இரவு 11.00 மணிக்கு GH க்கு சென்றோம். பஞ்சவர்ணம் மட்டும் தான் அங்கு இருந்தார். நான் அவரிடம் என் மகள் எங்கே என்று கேட்டபோது, மார்ச்சுவரியில் இருக்கு என்று சொல்லிவிட்டு அவரும் போய்விட்டார். வேறு அங்கு யாருமே இல்லை. எனது மூத்த மகளின் உடம்பு மார்ச்சுவரியில் வைத்திருந்தார்கள். நாங்கள் சென்று என் மகளின் உடம்பைப் பார்த்தோம். எங்களுக்கு என் மூத்த மகளின் சாவில் சந்தேகம் இருந்தது. சுப்பிரமணியபுரம் ஸ்டேசனில் போய் complaint கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரினை எனக்குத் தெரிந்த நபர், நான் சொல்லச் சொல்ல, எழுதிக் கொடுத்தார். நான் அதில் கையெழுத்திட்டு காவல் நிலையத்தில் கொடுத்தேன். **நான் அளித்த புகார் மனு அதசாஆ.1 ஆகும்.** எனது மூத்த மகளின் இறப்பிற்கு எதிரிகள் மூவரும் தான் காரணம். என் பேரனை இதுவரை என் கண்ணில் காட்டவில்லை. நான் போன்போட்டு கேட்ட போது, கேசை வாபஸ் வாங்கு காட்டுகிறேன் என்று மிரட்டுகிறார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரிகள் 2,3 தரப்பில்) :**</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை